**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 63/2019 |
| | | D/W's | : | **DW 1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | கருப்புசாமி | CASTE | : | – |
| S/O. W/O | குப்பையாண்டி | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | சின்னஇலந்தை குளம் | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 48 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.09.2024**

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. மீனாட்சி அம்மாளிடம் கிரையம் வாங்கிய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் மீனாட்சி அம்மாளிடம் கிரையம் வாங்கவில்லை. அந்த பத்திரம் எனது எதிராக உள்ளதால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து வழக்கறிஞர் ஆணையர் சொத்தை அளப்பதற்கு ஒரு முறை வந்தார். சர்வேயர் தாமதமாக வந்ததால் வழக்கறிஞர் ஆணையர் சொத்தை அளக்காமல் சென்றுவிட்டார் என்றால் சரியல்ல.

2. நீதிமன்ற ஆணையர் 2வது முறையாக வந்துதான் சொத்தை அளந்தார் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் சொத்தை அளந்தபோது வழக்கின் இரு தரப்பினரும் சர்வேயரும் இருந்தார் என்றால் சரிதான். சர்வேயர் வழக்குச்சொத்தை மேற்குத்திசையில் இருந்து அளக்க தொடங்கினார். அந்த இடத்திலிருந்து சர்வே கல்லிலுருந்து அளக்கப் தொடங்கினார். வழக்குச்சொத்திற்கு தெற்கேயும் சர்வே கல் உள்ளது. தாவா சொத்திற்கு வடக்குப்புறம் முல்லைப்பெரியார் கால்வாய் உள்ளது.

3. கால்வாயிக்கு கிழக்குப்பக்கம் முள்வேலி போடப்பட்டுள்ளதாக ஆணையர் அறிக்கையில் உள்ளது என்றால் அங்கு வேலி இல்லை. ஆணையர் அங்கு முள்வேலி உள்ளதாக குறிப்பிட்டுள்ளார், நான் வழக்கிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த முள்வேலி உள்ள இடம் சர்வே எண் 80/6 ஏ 1 என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கு கிழக்கேதான் தாவா சொத்து உள்ளது. தாவா சொத்தில் மேற்குப்பக்கம் சமாதி உள்ளது, அந்த 1 செண்ட் இடம் மலைச்சாமி மகன் கண்ணனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

4. மேற்படி கண்ணன் இடத்திற்கு கிழக்குப்புறம் சுப்பிரமணியன் மகன் மணிக்கு 2 செண்ட் இடம் உள்ளது என்றால் சரிதான். மணியின் இடத்திற்கு கிழக்கே வாதியின் இடம் உள்ளது. வாதியின் இடத்திற்கு கிழக்கே எங்கள் இடம் உள்ளது. எங்களுக்கு சொந்தமானது 3 செண்ட் இடம். எங்கள் இடத்திற்கு பத்திரம் இல்லை, கூட்டுப்பட்டா உள்ளது. கூட்டுப்பட்டாவாக உள்ளதால் எனது இடம் எங்குள்ளது என்று எனக்கு தெரியவில்லையென்றால் சரியல்ல.

5. நீதிமன்ற ஆணையர் அளந்த போது எனது 3 செண்ட் இடத்தை தாண்டி வாதியிடமான 1 செண்ட் இடத்தில் நான் வீடு கட்டியுள்ளதாக தெரியவந்தது என்றால் சரியல்ல. நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக ஆணையர் அறிக்கையில் உள்ளது, நான் வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 380 சதுர அடி நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக உள்ளது என்றால் எனக்குத்தெரியாது.

6. வாதி வழக்குச்சொத்து உள்ளபடியே இருக்கவேண்டும் என்று நீதிமன்றத்தில் உத்தரவு பெற்றுள்ளார், உத்தரவை மீறி நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவு உள்ளதை வழக்கறிஞர் சொன்னாரா என்றால் வாதிக்கு நான் வீடு கட்டியுள்ள இடத்திற்கும் சம்பந்தமில்லை. நான் நீதிமன்ற தடை உத்தரவு நிலுவையில் இருந்தபோதே நான் வீடு கட்டிவிட்டேன் என்றால் எனக்குத்தெரியாது. உத்தரவுபற்றி தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. நான் ஆக்கிரப்பு செய்துள்ள இடம் வாதிக்கு சொந்தமான இடம் என்றால் சரியல்ல. நான் ஆவணம் இல்லாமல் எனக்கு உரிமையில்லாத இடத்தில் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ளபடி பிராதில்

தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**Sd/Trur copy**

**திரு.M.P.ராம்கிஷோர்**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.